# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 191 /2018

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | :Chinnaiah | Father/ Name: | Chinnaiah |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.03.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் பட்டூரில் வசிக்கிறேன். விவசாயவேலைசெய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் எதிரிகளில் வலதுபுறத்தில் முதலாவதாக நிற்கும் நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டு போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தபோது நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். அந்த வாக்குமூலத்தில் எதிரிகள் 3 பேரும் ஸ்பிலண்டர் இருசக்கர வாகனத்தில் வந்தபோது ஆட்டுக்குட்டி நின்றதாகவும், கருப்புநிற பொட்டை ஆடு ஒன்றை தூக்கிக்கொண்டு சென்றபோது அவர்களை பிடித்துக்கொண்டு வந்து காவல்நிலையத்தில் வைத்திருந்ததாகவும், அவர் ஒப்புதல் வாக்குமூலத்தில கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சதீஷ் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.5 ஆகும், போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

அ.சா.1 எனது உறவினர் என்றால் சரிதான். அவர் என் மைத்துனர். போலீசார் என்று விசாரித்தனர் என்றால் காலை 09.30 மணிக்கு இருக்கும். நான் முதல் விசாரணையில் சொன்ன பெயர்கள் அனைத்தும் எனக்கு தெரியாது என்றும், போலீசார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். எதிரிகள் வரிசையில் வலதிலிருந்து 1-வதாக நிற்கும் நபர்தான் (1-வது எதிரி) வாக்குமூலம் கொடுத்தார். வாக்குமூலத்தில் என்ன விவரம் சொன்னார் என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லத்தெரியாது. விசாரணை

எந்த காவல்நிலையத்தில் நடைபெற்றது என்றால் மேலூர் காவல்நிலையத்தில். அ.சா.1 ராஜாவுடன் நான் ஆடுகளை தேடிச்சென்றேனாள ன்றால் இல்லை. அதன்பின்பு காவல் நிலையத்திற்கு மட்டும் உடன் வந்தேன். அ.சா.1 உடன் காவல்நிலையத்திற்கு சென்றபோது வெள்ளை பேப்பரில் கையெழுத்து என்னிடம் வாங்கினார்கள் என்றால் சரிதான். ஆனால் அதில் எழுதியிருந்தது. நான் சொன்மாதிரி போலீசார் என் முன்னிலையில் எதிரியிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கிய நபர் வேறு ஒருவர் என்றாலும், தற்போது நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்படுபவர் வேறு ஒருவர் என்றாலும் சரியல்ல. அ.சா.1 என் உறவினர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.